RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-222934

# கி. ராஜநாராயணன் கதைகளில் எரிக்சனின் படிநிலைத் தாக்கம்

மு. பாலகணேஷ் [அ, *]

[அ] தமிழியல்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி) சிவகாசி-626123, தமிழ்நாடு, இந்தியா.

# Erikson's Hierarchical Influence on Ki Rajanarayanan Stories

M. Balaganesh [a, *]

[a] Department of Tamil, Sri Kaliswari College, Sivakasi-626123, Tamil Nadu, India

* Corresponding Author: ajaybala2405@gmail.com

Received: 25-09-2022
Revised: 19-11-2022
Accepted: 27-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

K. Rajanarayanan is the theme of his story about the life of the people of Karisal. It can be said that the Tamils of these people are the creator of a single person. This is the story of Eric Erikson's theoretical steps in the story of such personalities, which is a special name for the entire Karisal literature. A healthy man must pass from childhood to old age. In each step, man has to face his problems and mature in it and look for new challenges. Each step is built on the successful completion of the previous step. Unfulfilled steps appear to be problems in the future. Eric Erik has made this as a step principle.

**Keywords:** Sangam Literature, Friend, love, Personality, Social problems

## முன்னுரை

கி. ராஜநாராயணன் சிறந்த கதை சொல்லி கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலை தன் கதையுலகத்தின் கருப்பொருளாகக் கொண்டவர். இம்மக்களின் தமிழுக்குத் தனியே ஒருஅகராதி உருவாக்கியவர் என்றே கூறலாம். ஒட்டு மொத்த கரிசல் இலக்கியத்திற்கும் தந்தை என்ற சிறப்பு பெயர் கொண்டவர் இத்தகைய ஆளுமைகளை உடைய கி.ரா வின் கதைகளில் எரிக் எரிக்சனின் கோட்பாட்டு படிநிலைகள் பொருந்தும் நிலைகளை ஆய்வதே இவ்வாய்வாகும்.

## எரிக்சனின் சமூக உளவியல் சார் வளர்ச்சிப் படிநிலைகள்

ஆரோக்கியமாக வளரும் மனிதன் குழந்தைப் பருவம் முதல் (முதிர் அகவையர்) வயோதியப் பருவம் வரை கடந்து போக வேண்டும். ஒவ்வொரு படிநிலையிலும் மனிதன் தனக்கான சிக்கல்களை எதிர்கொண்டு அதில் முதிர்ச்சியடைந்து புதிய சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு படிநிலையும் முன்னைய படிநிலையின் வெற்றிகரமான நிறைவில் தான் கட்டப்படுகிறது. நிறைவேறாத படிநிலைகள் எதிர்காலத்தில் பிரச்சினைகளாக மீண்டும் தோன்றுகிறது. இதனை எரிக் எரிக்சன் படிநிலைக் கோட்பாடாக வகுத்தளித்துள்ளார் (Erikson, 1977).

எட்டுப் படிநிலைகளும் வயதும்

1. நம்பிக்கை : அடிப்படைநம்பிக்கை - அவநம்பிக்கை (பிறப்பு -2வயது)
2. விருப்பம் : தன்னாட்சி -வெட்கம் மற்றும் சந்தேகம்(2 - 4வயது)
3. நோக்கம் : முயற்சித்தல் - குற்றவுணர்வு (4 - 5வயது)

4. திறமை : முயற்சி -தாழ்வுச்சிக்கல் (5 - 12வயது)
5. மெய்ப்பற்று : அடையாளம் - அடையாளக் குழப்பம் (13 - 19வயது)
6. அன்பு : நெருக்கம் - தனிமை (20 - 24வயது)
7. கவனம் : உற்பத்தி -தேக்கம் (25 - 64வயது)
8. ஞானம் : மனமுழுமை - மனத்தளர்ச்சி (65 - இறப்பு)

## முதல் படிநிலைப் பாத்திரம்

பிறப்பு முதல் இரண்டு வயது வரை உள்ள குழந்தை பருவம் என்னும் இப்படிநிலை அதிகமுக்கியத்துவமான படிநிலையாகும். இதில் குழந்தையிடத்தில் நம்பிக்கையினைத் தூண்டுவதாகும் அந்நம்பிக்கையினைப் பெற்றோர் மற்றும் தம்மைச் சுற்றி உள்ளவர் மீது குழந்தை உணர்கிறது. மேலும் இவ்உலகினைத் தனது பாதுகாப்பான இடமாக அடையாளம் காண்கிறது (Erikson, 1977)..

"மின்னல்" எனும் சிறுகதையில் பேருந்தில் அதிக நெரிசல் நிரம்பிவழியும் சூழலில் ஒரு பெண் தன்கையில் குழந்தையோடு கூட்டத்தில் ஏறுகின்றாள். இதுவரை பொறுமையில்லாது இருந்தவர்களிடம் மகிழ்ச்சியினை ஏற்படுத்தும் விதமாக இக்குழந்தையின் சிரிப்பு அமைகிறது. குழந்தை இச்சமூகத்தினை நம்பி சிரிப்பினை உண்டாக்குகிறது. தாயைத் தவிர புதிய நபர்களைக் கண்டால் அழக்கூடிய குழந்தைகள் மத்தியில் இக்குழந்தையானது அனைவரையும் தன் சிரிப்பில் மகிழ்ச்சி அடையச் செய்கிறது பெயர் கூறாத துணைமைக் கதாப்பாத்திரமான இக்குழந்தை எரிக்கனின் முதல்படிநிலைக்கு பொருத்தமாக அமைகிறது.

## இரண்டாம் படிநிலைப்பாத்திரம்

இரண்டு வயது முதல் நான்கு வயது உள்ள துள்ளுநடைப் பருவம் இப்பருவத்தில் குழந்தைகள் தன் உடலின் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கு ஆரம்பிப்பர். இப்பருவத்தில் குழந்தைகள் சுதந்திர மாணவர்காக உணர்கின்றனர். இவற்றில் ஏற்படும் மாற்றத்தினால் மனதளவில் முதிர்ச்சி அடையாது போகின்றனர். பின்னர் நாளடைவில் இது ஒரு விதமான உளப்பிணியாகவும் நடத்தைகளில் மாற்றத்தினால் மனதளவில் முதிர்ச்சி அடையாது போகின்றனர். பின்னர் நாளடைவில் இது ஒருவிதமான உளப்பிணியாகவும் நடத்தைகளில் மாற்றத்தினையும் உண்டாக்குகிறது (Erikson, 1977).

"கதவு" எனும் சிறுகதையில் சீனிவாசன் எனும் கதைப்பாத்திரம் இப்படிநிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வரும் சீனிவாசனுக்கு பசிக்கின்றது தன் அக்காவிடம் கஞ்சி கேட்கிறான். அவள் கஞ்சியில்லை என்று கூறவும் அவனது நிலை மாற்றம் அடைகிறது. மேலும் பசிக்கும் சூழலும் தன்னால் கீழே இருந்து கண்டு எடுக்கப்பட்ட படத்தை சுவற்றில் ஒட்ட முடியவில்லை என்ற ஏமாற்றமும் அவனுக்கு அழுகையை உண்டாக்கிறது. இதன் மூலம் இவனிடம் உள்ள மனஉறுதிப்பாடு குறைகிறது. இதனை "சீனிவாசன் அங்கே சிதறிக்கிடந்த கம்மம் பருக்கையை எடுத்துப் படத்தின் பின்புறம் தேய்த்து ஒட்டுவதற்குவந்தான் கதவு இல்லை என்ன செய்தவதென்று தெரியாமல் சுவரில் ஒட்டினான் படம் கீழே விழுந்து விட்டது அடுத்த சுவரில் எல்லாம் ஒட்டிப் பார்த்தான் ஒன்றும் பிரயோசனம் இல்லை ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்" (க.ப.20) என்ற வரிகளின் மூலம் இப்படிநிலைக்கு ஏற்றத் தன்மையில் சீனிவாசன் எனும் பாத்திரம் அமைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இரண்டாம் படிநிலையில் குழந்தைகள் தம்மைச் சார்ந்தவர்களை நம்புவதற்குக் கற்றுக் கொள்கிறது. இதற்குத் தேவையான மனபலம் பெறுகிறது. இவற்றுள் ஏதேனும் மாற்றம் நிகழும் சூழலில் குழந்தைகள் தன் சுயம் சார்ந்து வளராமல் எப்போதும் வெட்கம், பயம் மற்றும் சந்தேகத்தோடு வளர்கிறது (Rajanarayanan, 2016).

## மூன்றாம் படிநிலைப்பாத்திரம்

நான்கு வயது முதல் ஐந்து வரை உள்ள முன்பள்ளி பருவம் இதுவாகும். இப்பருவத்தில் பிள்ளைகள் முதியவர்கள் போலச் செயல்பட ஆரம்பிப்பர். தன் சக்திக்கு அப்பாற்பட்டு செயல்படக்கூடிய காரியங்களில் ஈடுபடுவர். தன் வயதுக்கு மீறிய செயல்களில் ஆர்வம் கொள்வர். இவற்றுள் ஏதேனும் நிறைவுபெறாமல் போகும் சூழலில் குற்ற உணர்வு உண்டாகும், வளர்ச்சிநிலை தடைபெறுவதாக அமையும். இப்பருவம் மிகவும் கவனமாக கையாளப்படவேண்டிய பருவமாகும்.

'கிலி' எனும் சிறுகதையில் பெயர் குறிப்பிடப்படாது உள்ள ஒரு பையனின் தன்மையினை மூன்றாம் படிநிலையில் பொருத்திப் பார்க்கலாம். இந்த பையன் தன் வயது நிலைக்குவிட அதிகமான வினாக்களை கதை தொடங்கும் முதல் ஆரம்பம் செய்து முடிவுவரை கேட்டுக்கொண்டே வருகிறான். புலியானது மலையில் எங்கு இருக்கும் என ஆரம்பித்து புலி ஆட்களை அடிச்சித்திங்குமோ? அருவி நீர் எங்கிருந்து வருது என அடுத்தடுத்து வினாக்களைக் கேட்டு திணறச் செய்கிறான். அவனது தந்தை ஏதோ ஏதோ சொல்லி மாற்றத்திற்கு கொண்டுவந்தாலும் வினாக்கள் மழைபொழிகிறது குரங்கு அருவியிலே குளிக்குமா, ரெட்டைக் குழல்த் துப்பாக்கியைப் புலி வேட்டைக்கு போகும்போது பிடுங்கிட்டுப் போய்ட்டா என்ன செய்வீங்க? என்று தன் வயதுக்கு மீறிய செயல்களின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவனாக விளங்குகின்றான் அவனது கேள்விகளில் அனைத்திலும் அவனது ஆர்வம் தெரிகின்றது. ஒரு நாளில் பூனை ஒன்றைக்காட்டி இதுபெரிசாய் ஆன பிறகு புலியாக மாறுமோ என்று கேட்கிறான். இதில் அவனது தந்தை எந்த இடத்திலும் வளர்ச்சி தடைபெறும் அளவிற்கு கூறவில்லை.

## நான்காம் படிநிலைப்பாத்திரம்

ஐந்து முதல் பன்னிரண்டு வயது வரை உள்ள பள்ளிப்பருவம் இப்படிநிலையாகும். இது ஒரு சந்தோசமான கற்பனைப்பருவமாகும். குழந்தைகள் வன்முறைக்குச் செல்லாமல் அமைதியாய் வளரச் சரியாhன வளர்ப்ப முறைத் தேவைப்படக்கூடிய பருவம் இதுவாகும். குடும்பத்தைக் கடந்து தனது அறிவை விருத்திச் செய்ய சமூகத்தோடு தன்னை இனைத்துக் கொள்ள உதவக்கூடியது இப்பருவம்.

"கதவு" என்ற சிறுகதையில் உள்ள லட்சுமி எனும் கதாபாத்திரம் இப்படிநிலையை விளக்கி நிற்கிறது. எட்டு வயது கொண்ட ஒரு பெண் குழந்தை இப்பருவத்தில் மகிழ்ச்சியாக இருப்பதை விட இவ்விளையாட்டுப் பருவத்தில் தன் குடும்ப சுமையை தன் தாய்க்காக சுமந்து நிற்கிறது. அவளைப் போன்ற ஒத்த வயதுடைய குழந்தைகள் மகிழ்ச்சியாக விளையாடினாலும் இவளது மனது குடும்பத்தோடு ஒன்றிவிடுகிறது. கதவினைக் கழற்றி எடுத்துச் சென்ற பின்பு உண்ணும் ஒணவினை நாய் உண்டுவிடுகிறது. இவ்வேளையில் இக்குழந்தை தன் தம்பிக்கு உணவு இல்லை என்றும் தன் தாய்க்கு உணவு இல்லை என்றும் வருந்தி நிற்கிறது. தன் தாய் வேலைக்குச் சென்று திரும்புகையில் பசியோடு வருவாள் என்று அவளை எண்ணி அழுவதாக கதையில் சித்தரிக்கப்படுகிறது. மேலும் குடும்பத்திற்கு உணவு சமைக்கும் பணியும் இக்குழந்தையைச் சார்ந்தது என்ற நிலையில் மனச்சிக்கலும், மனக்குழப்பமும் பெறும் தன்மை உண்டாகின்றது. இதனை

"கதவு இல்லையே என்ற துக்கமும் ஏக்கமும் தொனிக்க தன்னுடைய தாய் பசியோடு காட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லெட்சுமி"(க.ப.19) என்ற வரிகள் மூலம் அறியலாம்.

குடும்பத்தினைக் கடந்து தனது அறிவை விருத்திச் செய்ய சமூகத்தோடு தன்னை இனைத்துக் கொண்டு ஒற்றுமை மனப்பான்மையுடன் வாழக் கூடிய பருவம் என்ற நிலையில் "சிநேகம்" என்ற கதையில் ராமி எனும் கதாபாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவயதில் அதாவது எட்டு வயதிலே தனது தாய் தந்தையை இழந்து பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டு துன்பம் அடையும் வேலையில் ஒற்றுமை மனப்பான்மையில் தன் அறிவை விருத்திச் செய்கிறது. ராஜா என்ற தன் சிநேகிதனுடன் சேரும் போது தன் கவலைகள் அனைத்தும் மறந்து விடுகிறது. ராமி காலைப் பொழுதில் பனியில் தன் உடலும் மனமும் துன்பம் அடைந்து கொண்டிருக்கும் வேலையில் ராஜாவினைக் காண்கிறாள். சூரியக்கதிர் வந்த உடன் பனிகள் மறைந்தது போன்று இவளது மனதில் உள்ள துன்பங்கள் மறந்து

போய்விடுகிறது. இதன் மூலம் ஒற்றுமைத் தன்மையோடு சமூகத்தில் இணைந்து வாழ்தால் துன்பம் நீங்கும் என்பதை "எத்தனையோ அற்புதக் கற்பனைகள் தோனும் இதை விளையாடும் போது ஒளிந்திருந்தவரை தேடிவந்தவர் கண்டு பிடித்துக் கொண்டவுடன் இருவரும் சேர்ந்து சிரிப்பார்களே இந்த சிரிப்புக்கு உலகத்தில் ஏது ஈடு?"(சி.ப.91) என்ற வரிகள் மூலம் அறியமுடிகிறது.

## ஐந்தாம் படிநிலைப் பாத்திரம்

பதிமூன்று வயது முதல் பத்தொன்பது வயது வரை உள்ள கட்டிளமைப் பருவம் இதுவாகும். இதில் பிள்ளைகள் தன்பலம் பலவீனத்தை அறிந்து தம்மை அடையாளம் காண்கின்றனர். இப்பருவத்தில் உடலில் மாற்றங்கள் உண்டாகின்றது. இதில் ஏதேனும் குழப்பம் ஏற்படும் சூழலில் பல நெருக்கடியான புதிய பல மாறுதல்களும் உண்டாகும். இவற்றால் சுய அடையாளம் மறைந்து நெறி பிறழ்ந்தவர்களாகவும் மாறிவிடுவர்.

"ஜீவன்" என்ற கதையின் வழி அறியமுடிகிறது. இக் கதையில் அங்குசாமி என்ற பாத்திரமானது வாய்பேச முடியாத ஊமை அவனது தம்பி ஆதிலிங்கம் இவர்களில் ஆதிலிங்கத்திற்கு திருமணம் என்று பேசுகின்றனர். இதனை அறிந்த அங்குசாமி தனக்கும் திருமணம் நடைபெறும் என்று எண்ணி நாட்களை கடத்திச் செல்கிறான். திருமண நாளும் நெருங்கி வந்துவிட்டது. பெண்ணை காரில் அழைத்து வந்தனர். அங்குசாமி மண்டபத்தின் வாசலில் பெண்ணைக் காண்பதற்கு காத்திருந்தான் காரில் இருந்து ஒரு பெண் மட்டுமே வருகிறது. தனக்கு பெண் இல்லை என்றும் தனது தம்பிக்கு மட்டுமே திருமணம் என்பதையும் உணர்ந்து கொள்கிறான். இதனைக் கண்டு மண்டபத்தின் வாசலிலே குழம்பி உள்ளேச் சென்று கதறி அழுகிறான். அவனை சரிபடுத்துகின்றனர். அவன் மனதளவில் தளர்ச்சி அடைந்துவிட்டான் வார்த்தைகளால் சரிபடுத்த முடியவில்லை. பின்னர் விரைந்து சென்று ஒரு அறையினுள் கதவினை அடைத்துக் கொள்கிறான். அனைவரும் குழப்பத்தில் பதறி கதவினைத் திறந்து பார்த்தனர்.

"அலங்கோலமாகத் தரையில் வீழ்ந்து கிடந்தான். அவன் இறந்து போய்விட்டானோ மயங்கிக்கிடக்கிறானா என்று தெரியவில்லை. வேட்டி பூராவும் இரத்தத்தால் நனைந்து இருந்தது". (ஜீ.ப.185) வேட்டியை விலக்கிப் பார்க்கின்றனர். அங்குசாமி தனது உறுப்பினை ஏதோ ஒரு தகட்டினால் அறிந்து இரத்தம் ஒழுக கிடக்கின்றான். உடலியல் மாற்றத்தால் உண்டர்க்கூடிய மனக்குழப்பம் பல நெருக்கடியான சூழலில் புதிய மாறுதல்களை உண்டாக்குகின்றது என்ற எரிக்கனின் படிநிலையினை முன்வைத்து இங்கு அங்குசாமி எனும் கதாபாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

## ஆறாம் படிநிலை பாத்திரம்

இருபது முதல் இருபத்து நான்கு வயது வரை உள்ள இளவளர்ந்தோர் பருவம் இப்பருவத்தில் ஒத்த பாலினரிடமோ அல்லது எதிர் பாலினரிடமோ நேசம் ஏற்படும். "விளைவு" எனும் சிறுகதையில் பாவய்யா எனும் பாத்திரம் நிலைபெறாத சூழலில் தனிமைமேலோங்கி நிற்கும் தன்மையில் அமைக்கப்பட்டுள்ளது. பாவய்யா தனது எட்டு வயது வரை ஆடையின்றி அலைந்தவன். அவனுக்கு தாய்-தந்தை இல்லை மணிநாயக்கர் வீட்டில் தங்கி மாடுமேய்க்க கூடியவன். எட்டு வயது வரை கோவணம் இல்லாத ஒருவன் அதற்குப் பின்பு கட்டிக்கொள்கிறான். காரணம் அவனுக்குள் உண்டான உணர்வு ரீதியான மாற்றம் ஒரு நாள் கிணற்றில் தண்ணீர் இறைத்து விட்டுச் செல்கிறான். அப்போது சுப்பாலு என்ற குறும்புகாரபெண் அவனது கோவணத்தை உருவிவிட்டாள் அவன் வெட்கத்தில் நாணி தலைகவிந்தாலும் மீண்டும் அந்தக் கோவணத்தைக் கட்டிக் கொள்ளவில்லை. சுப்பாலு எடுத்துக் கொடுத்தால் மட்டுமே கட்டிக் கொள்வேன் என்று உறுதியாக இருந்தான் இறுதியில் அவள் வந்து எடுத்துக் குடுத்துக் கட்டிக் கொள்கிறான். ஊரே சிரித்தது இருப்பினும் அவனது செயல் உணர்வு ரீதியாக முற்றிலுமாக மாறுபாடு அடைந்துள்ளது என்பதையும் பின்னத் இவை நாளடைவில் உளநோயாக மாற்றம் அடையும் என்பதையும் இக்கதையில் பாவய்யா எனும் பாத்திரம் விளக்கிநிற்கிறது.

## ஏழாம்படி நிலைப் பாத்திரம்

இருபத்தைந்து முதல் அறுபத்தி நான்கு வயதுவரை உள்ள நடுத்தரப்பருவம் இதுவாகும். இப்படிநிலையினர் இனவிருத்தியில் ஈடுபட்டு மனித வளத்தையும், பொருளாதார வளத்தையும் ஏற்படுத்துவர் தமக்கென சமூகத்தில் கௌரவமான இடத்தினை எதிர்ப்பர்.

“கோமதி” எனும் சிறுகதை இத்தகைய படிநிலைக்கு முழுவதுமாக பொருந்தக்கூடியது கோமதி பிறப்பால் ஆணாக பிறந்தாலும் வளரும் காலங்களில் தன்னை பெண்ணாக பாவித்து வாழ்ந்து வருகிறான். அவன் மீது கோமதிக்கு ஒருவித அன்புநிலை ஏற்பட்டு அவனைத் தொட்டுப்பேச ஆரம்பித்தான். இது ரகுவிற்கு பிடிக்கவில்லை. இதனைப் போன்று ஒரு நாள் நாடியைத் தொட்டு பேசவும் ரகு கோமதியை அடித்து விடுகிறான். இந்நிகழ்வு வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் தெரிந்துவிடுகிறது. கோமதி இரவு முழுவதும் அழுகிறான். கோமதிக்கு இந்நிகழ்வினை எண்ணிப்பார்த்து மனதில் கலக்கமும் தனிமையும் ஏற்படுகிறது. சிலநாட்கள் கழித்து ரகு ஊரை விட்டுச் சென்று விட்டான் இருப்பினும் கோமதிக்கு ரகு நினைவு தான் முழுவதும் இருக்கிறது. இதனை

“அவன் முன்போல கலகலப்பாக இல்லை தனியாக ஏதாவது ஓரிடத்தில் இருந்து கொண்டு எதையோ பறிகொடுத்தவன் போல் மனதை அறுக்கும் பெருமூச்சுக்களை அடிக்கடிவிடுவான் உடம்பு மெலிந்துவிட்டது”(கோ.ப.66) இவ்வரிகள் மூலம் அறியமுடிகிறது. சமூகத்தில் கௌரமானநிலையை இழந்தால் இப்பருத்தினரிடம் தேக்கநிலை ஏற்பட்டுவிடும் என்பதற்கு கோமதி சான்று.

## எட்டாம் படிநிலை பாத்திரம்

அறுபத்தி ஐந்து வயதிற்குமேற்பட்ட பருவம் இதுவாகும். வாழ்வின் இறுதியை நோக்கிய நிலை. மனிதர்கள் தம் வாழ்வில் சந்தித்த வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொண்டு வாழும் பருவமாகும் இருப்பினும் தமது வாழ்க்கையை பின்னோக்கிப் பார்த்து உணரக் கூடிய பருவமாகும்.

“புறப்பாடு” எனும் கதையில் கெப்பணக்கவுண்டர் என்ற பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. தன் இளமைக் காலம் முதல் விவசாயத்தையும், வயலையும் நம்பி வாழ்க்கையினை நிகழ்த்திய கவுண்டர் படுத்தபடுக்கையில் இருக்கும் போதும் தன் உயிர் பிரிந்து போகும் வரை விவசாய நிலத்தை எண்ணிக் கொண்டே கிடந்துள்ளார் காசையும் கரைத்து ஊற்றியுள்ளனர் உயிர் போகவில்லை.

“கரிசல் மண்ணைக் கொண்டு வந்து சங்கில் சுண்டைக்காய் அளவு இட்டு அந்த ஊரின் உப்புத் தண்ணீரான குடிநீரில் கரைத்துக் கவுண்டரின் திறந்த வாயில் புகட்டினார்;கள்”.(பு.ப.168) பின்னர் சில மணிநேரம் கழித்து கவண்டரின் உயிர் பிரிந்து சென்றது. மனத்தளர்ச்சியும் ஏக்கமும் இறப்புவரை உள்ளது என்பதற்கு கவுண்டரின் பாத்திரம் சான்றாக உள்ளது

## முடிவு

எரிக்எரிக்சன் மனித வாழ்க்கையை எட்டுப் படிநிலைகளாகப் பகுத்துள்ளார். இப்படிநிலைகள் கி.ராஜநாராயணின் சிறுகதைப் பாத்திரங்களில் பொருந்துவதை ஆய்வின் வழி புலப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு படிநிலையிலும் மனிதன் சிக்கல்களை எதிர்கொள்வது அதில் முதிர்ச்சியடைந்து புதிய சவால்களை எதிர்நோக்குவது போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. மனிதர்கள் தம் வாழ்வில் சந்தித்த வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொண்டு வாழுகின்றனர் என்பதை இப்படிநிலைகள் வழி அறிய முடிகிறது. ஒவ்வொரு படிநிலையும் முன்னைய படிநிலையின் வெற்றிகரமான நிறைவில் தான் முழுமைபெறுகிறது. நிறைவேறாத படிநிலைகள் எதிர்காலத்தில் பிரச்சினைகளாக மீண்டும் தோன்றுகிறது என்பதை அறிய முடிகிறது.

## References

Erikson, E.H. (1977) Childhood AND Society, Paladin Grafton Books, London, UK.

Rajanarayanan, K. (2016) Rajanarayanan Kathaigal, Annam Veliyedu, Thanjavur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License